# மணப்பாறை நகராட்சி

**2019- ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் ( 13.08.2019) 13 – ஆம் தேதி செவ்வாய்க்கிழமை மாலை 04.00 மணிக்கு நகர்மன்ற அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள்**

| மன்ற கூட்டம் நடைபெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்ற கூட்டப் பொருள் | தீர்மானம் |
|---|---|---|
| 13.08.2019 | **பொருள் – 1**<br>நகராட்சி நிர்வாக ஆணையர் , சென்னை அவ்ர்களின் கடித ந .க.எண்.25480/J3/2015 நாள்.13.06.2016-ன்படி மணப்பாறை நகராட்சியில் துப்புரவு பணியாளர்கள் , கடைநிலை பணியாளர்களுக்கு 2019/2020-ஆம் ஆண்டிற்கு வாங்கப்பட் வேண்டிய சீருடை வாங்கி வழங்கவும் , அரசாணையின்படி தைய ல் கூலி வழங்கிடவும் உத்தேச செலவினம் ரூ .2.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது<br><br>**அலுவலகக்குறிப்பு**<br>1. அனுமதிக்கலாம்<br>2. செலவினத் தொகையை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம் | **தீர்மான எண்.582**<br>**அனுமதிக்கப்பட்டது.** |
| 13.08.2019 | **பொருள் – 2**<br>இந்நகராட்சி ஈப்பு எண்.TN45BZ 7050-க்கு ஏற்பட்டுள்ள கிளட்ச் பழுதினை சரிசெய்யும் பொருட்டு ஈப்பு அங்கீகரிக்கப்பட்ட டீலர் சிவா ஆட்டோ மொபைல்ஸ் (பி)லிட், திருச்சி நிறுவனத்தில் மராமத்து செய்யவும் , அதற்கான தோராய செலவினம் ரூ .5300/- செலவினம் மேற்கொள்ளவும் அவசர அவசியம் கருதி மேற்கா ணும் செலவினம் தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 ன்கீழ் பணி உத்தரவு வழங்கி பணிகள் மேற்கொண்டமையினை மன்றத்தில் பதிவிற்கு பொருள் வைக்கப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு**<br>பதிவு செய்யலாம் | **தீர்மான எண்.583**<br>**பதிவு செய்யப்பட்டது** |

| | | |
|---|---|---|
| 13.08.2019 | **பொருள் – 3**<br>துணை இயக்குநர் சுகாதார பணிகள், திருச்சி அவர்களின் கடிதம் ந.க.எண்.4417/2019/அ3 நாள்.05.08.2019-ன்படி மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர் அவர்களின் கடிதம் ந.க.எண்.2252/2019/அ3 நாள்.08.08.2019ன்படியும் தற்பொழுது மழைக்காலம் தொடங்க உள்ளதால் இந்நகராட்சி பகுதியில் டெங்கு கொசுப்புழு உற்பத்தி கலன்களை கண்டறிந்து அழித்திடவும், நீர் சேமிப்பு கலன்களில் அபேட் மருந்து தெளிக்கவும், விழிப்புணர்வு பணிகள் மேற்கொள்ளவும், 35 எண்ணிக்கையிலான கொசு ஒழிப்பு பணியாளர்கள் (DBC பணியாளர்கள்) மாவட்ட ஆட்சித்தலைவர், திருச்சி அவர்களின் பணியாளர் கூலி விபர பட்டியல் RC. J3/7525/2018 நாள்.23.10.2018ன் படி நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு ரூ.360/- வீதம் 16.08.2019 முதல் 31.12.2019 வரையிலான நாட்களில் ஞாயிறு கிழமை நீங்கலாக 118 நாட்களுக்கு 35 நபர்கள் சுய உதவி குழுவினர் நியமித்து பணிகள் மேற்கெள்ளவும் அதற்கான தோராய செலவினம் ரூ.360/- X 35 X 118 நாட்கள் =ரூ.1486800/- செலவிடவும் கூட்டப்பொருள் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக்குறிப்பு**<br>1. பொது சுகாதார அவசியம் கருதி அனுமதிக்கலாம்<br>2. மேற்காணும் செலவினம் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்<br>(H1/1827/2019) | **தீர்மான எண்.584**<br>**அனுமதிக்கப்பட்டது.** |
| 13.08.2019 | **பொருள் – 4**<br>இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1 விடத்திலாம்பட்டி முதல் செவலூர்வரை உள்ள சாலை, வார்டு எண்.2 செவலூர் மாரியம்மன்கோவில் முதல் ஜல்லிக்கட்டு களம்வரை உள்ள சாலை, வார்டு.3 சங்கமரெட்டியபட்டி சாலை மற்றும் வார்டு எண்.6 அண்ணாவி நகர் குறுக்குச்சாலைகள் ஆகிய பகுதிகளில் உள்ள 4.652 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகளில் தார்சாலைப்பணிகள் ரூ.300.00 லட்சம் மதிப்பீட்டில் TURIP –2019–2020 நிதியின் கீழ் மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு நகராட்சி நிர்வாக ஆணையரிடம் நிர்வாக அனுமதி பெறவேண்டி மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு**<br>மன்றம் அனுமதிக்கலாம் | **தீர்மான எண்.585**<br>**அனுமதிக்கப்பட்டது.** |

| | | |
|---|---|---|
| 13.08.2019 | **பொருள் – 5**<br>2017- 2018 - ஆம் ஆண்டிற்கு மணப்பாறை நகராட்சிக்கு தணிக்கை மேற்கொள்ளப்பட்டதற்கான உள்ளாட்சி நிதி தணிக்கை கட்டணம் ரூ .59725/- உதவி இயக்குநர் , உள்ளாட்சி நிதி தணிக்கை திருச்சிராப்பள்ளி அவர்களுக்கு உரிய அரசு தலைப்பில் செலுத்திட மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு**<br>1. அனுமதிக்கலாம்<br>2.செலவினத் தொகையை வருவாய் நிதியில் மேற்கொள்ளலாம்<br>( ந.க.எண்.4468/2002/எச்1) | **தீர்மான எண்.586**<br>**அனுமதிக்கப்பட்டது.** |
| 13.08.2019 | **பொருள் – 6**<br>இந்நகராட்சி ஈப்பு வாகனம் TN45 BZ 7050 -க்கு Seating மராமத்து பணிகள் விலைப்புள்ளி பெற்று மேற்கொள்ளவும் அதற்கான தோராய செலவினம் ரூ .50,000/- க்கு மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு**<br>1. அனுமதிக்கலாம்<br>2.மேற்கானும் செலவினம் பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளலாம்<br>( ந.க.எண்.1163/2019/இ1) | **தீர்மான எண்.587**<br>**அனுமதிக்கப்பட்டது.** |

**தனி அலுவலர்**
**மணப்பாறை நகராட்சி**